www.tamilarangam.net

ஈழச்செய்தி
EELAM NEWS
EPIC
(ESTD IN 1980) POSTBAG 5551, MADRAS-600094. INDIA.

கடிதம் : 24 10-10-1984

# கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குவதோ?

பேச்சுவார்த்தை, வட்ட மேசை என்னும் திரைகளின் மறைவில் சிறீலங்கா சிங்கள இனவாத அரசு தனது கொலைகாரப்பட்டாளங்களை ஈழத்தில் குவித்துக் கொண்டிருக்கிறது.

ஈழ மக்கள் மீது தனது கொலைப் பட்டாளத்தை ஏவிவிட்டபடியே அடிக்கடி பேச்சுவார்த்தை பற்றிக் கூச்சலிடுகிறது இனவாத அரசு.

சர்வதேச அரங்கில் தனது கோரமான இனவெறியின் சுயரூபத்தை மறைக்க தனது கட்டுப்பாட்டில் உள்ள தகவல், தொடர்புச் சாதனங்கள் மூலம் ஈழப் பிரச்சனையைத் தீர்க்கப் போவதாகவும், ஆயுதம் ஏந்திப் போராடும் வாலிபர்கள் ''ஈழ மக்களில் சிறுபான்மையினர்'' எனவும் தம்பட்டம் அடிக்கிறது.

எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்ட ஈழ வாலிபர்கள் சிறீலங்கா கடற்படையால் வதைக்கப்பட்டு, நடுக்கடலுக்கு இழுத்துவரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சிறீலங்கா கூலிப்படையின் துப்பாக்கிக் குண்டுக்குத் தீனியான இந்த அப்பாவி வாலிபர்கள் பாசிச அரசால் ''பயங்கரவாதிகள்'' எனப் பட்டம் சூட்டப்பட்டுள்ளனர்.

இப்படியான படுகொலைகள் மூலம் ஈழ மக்களின் விடுதலை வேட்கையை தணித்து விடலாம் என சிறீலங்கா அரசும் அதற்கு நாசகார ஆலோசனை வழங்கும் இஸ்ரேலிய மொசாட், அமெரிக்க சி. ஐ. ஏ போன்ற பயங்கரவாத உளவு நிறுவனங்களும் திட்டம் போடுகின்றன.

முழு விடுதலைக்கு குறைந்த எந்தவிதமான சமரசத் திட்டமும் இதுவரை ஏற்பட்ட இழப்புகளுக்கும் ஈழ மக்கள் சிந்திய குருதிக்கும், ஈடாகாது. இனிவரும் காலங்களில் ஈழ மக்கள் சமாதானத்துடன் வாழ்வதற்கு, சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்கு அவர்கள் விடுதலையை வென்றெடுக்க முடிவெடுத்துள்ளனர்.

''கண்ணிரண்டையும் விற்று சித்திரம் வாங்கும்'' நிலைபோல் இனவாத அரசின் தந்திரோபாயங்களில் ஏமாந்து விடுதலைப் போராட்டத்தை இடைநிறுத்தும் எவரையும் ஈழம் ஏற்றுக் கொள்ளாது. கடந்தகால வரலாற்று அனுபவத்திலிருந்து பெறப்பட்ட முடிவான ''ஈழமே ஒரே தீர்வு'' என்ற உறுதியை சீர்குலைக்கும் விதமாக ஈழத்துக்கு குறைந்த சமரசம் பற்றிப் பேசும் உரிமை யாருக்கும் கிடையாது.

சிறீலங்கா இனவாத அரசுக்கு முட்டுக் கொடுக்க முண்டியடித்து வந்துள்ள ஏகாதிபத்திய அமெரிக்கா, பிரிட்டிஷ், சீனா, சியோனிச இஸ்ரேல் போன்ற நாடுகள் ஒன்றை உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு
EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION
LONDON BRANCH : EPIC B. M. Box 1738, LONDON WCI N 3XX

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலக சோசலிச நாடுகளும், தேச விடுதலை இயக்கங்களும், ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளும் ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னால் நிற்பார்கள்.

சிறீலங்கா அரசுக்கு உதவிபுரிவதால் மட்டும் நாம் அமெரிக்காவை எதிர்க்க வில்லை. சர்வ தேசமெங்கும் படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டு, உலக சோசலிச நாடு களையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் அச்சுறுத்தும் ஏகாதிபத்திய அமெரிக்கா உலக மக்களது பொது எதிரியாகும். ஆகவே ஈழ மக்களும் அமெரிக்காவையும் அதன் மேலாதிக்க நோக்கங்களுக்கு துணைபோகும் நாடுகளையும் நண்பர்களாகக் கருதமுடியாது.

சர்வதேச அரங்கில் நமது நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை தெளிவாக உணர்ந்துகொண்ட ஈழமக்கள் தமது நண்பர்களை நோக்கி மட்டுமே நட்புக்கரத்தை நீட்டு கின்றனர். தமது நண்பர்களின் நியாயமான போராட்டங்களுக்கு தமது ஆதரவை வழங்கு கின்றனர்.

***சர்வதேச முற்போக்கு ஜனநாயக சக்திகளே !***

ஈழ மக்களின் புரட்சிகர விடுதலைப் போராட்டத்துக்கு உங்கள் செயலூக்கமான ஆதரவைத் தாருங்கள். சர்வதேச புரட்சிகர படைவரிசையின் ஒரு பிரிவான ஈழ மக்களின் போர்க்கரங்களைப் பலப்படுத்துங்கள் **வெற்றி நமதே.**

### *ஈழச் செய்தி வாசகர்களே !*

நிதிச் சுமை காரணமாக ஈழச் செய்தியை ஒழுங்கான முறையில் வெளிக் கொணர்வது தடைப்படுகிறது. எனவே எமது பணியை மேலும் விரிவுபடுத்திட ஈழச் செய்தியைத் தொடர்ந்து தமிழிலும், ஆங்கிலத்திலும் கால ஒழுங்கு தவறாது வெளியிட நீங்கள் பங்களிக்க வேண்டும்.

ஈழச் செய்தியைத் தவிர வேறு சில விசேட வெளியீடுகளும் எம்மால் வெளியிடப்பட இருப்பதால் நீங்கள் எமக்கு நிதிஉதவி புரிந்திடுவது எமக்கு ஏற்பட்டுள்ள நிதிச்சுமையை குறைக்க உதவும்.

சர்வதேச அரங்கில் ஈழ விடுதலைப் பிரச்சாரத்தை மேலும் முடுக்கிவிட எமது இலண்டன் கிளையும் தீர்மானித்துள்ளது.

இவர்கள் ''சங்கே முழங்கு'' நிகழ்ச்சி மூலமும் ஈழப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

சிறீலங்கா அரசு தனது தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் ஈழப் போராட்டம் மீது அவதூறுகளை வாரிவீசும் இக் காலகட்டத்தில், ஈழ மக்கள் புரட்சிகர போராட் டத்தின் உண்மை நிலையை உலகுக்கு உணர்த்தும் பணி எமக்குண்டு.

எனவே உங்களால் இயன்ற நிதியுதவியை எமக்கனுப்பிவையுங்கள். எமது பணிக்கு உத்வேகம் அளியுங்கள்.

**வெற்றிவரை ஓயமாட்டோம்.**

★

### *சயனைட் மாத்திரை விழுங்கிய இளைஞர்கள் மரணம்*

ஜூலை 18 : 18-7-84 அன்று யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி வழியாக சென்று கொண்டிருந்த பொதுமக்களை சிறீலங்கா இராணுவத்தினர் அப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த ஈழவிடுதலை சம்பந்தமான சுவரொட்டிகளை அகற்றுமாறு வற்புறுத்தினர். அச்சமயம் ஐயம்பிள்ளை மாணிக்கவாசகர், மொறிஸ் றெஜினோல்ட் என்னும் இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் அவ்வழியால் வந்தபோது சிறீலங்கா இராணுவத்தினர் அவர்களை தடுத்து நிறுத்தினர். கொலை வெறிபிடித்த சிறீலங்கா இராணுவத்திடம் பிடி பட்டு சித்திரவதைகளுக்குள்ளாகி இரகசியங்களை வெளியிடவிரும்பாத அவ்விரு இளைஞர்களும் தம்மிட மிருந்த சயனைட் மாத்திரைகளை விழுங்கினார்கள். இயக்க இரகசியங்களை அறிவதற்கு முன்னர் இறந்து விடப் போகின்றார்களே என்று ஆத்திரமடைந்த காட்டு மிராண்டித்தனமான சிங்கள இராணுவம் அவர்களின் வாய்களைக் கிழித்தும் கண்களைக் குத்தியும் சப்பாத்துக் கால்களால் உதைத்தும் சித்திரவதை செய்தனர். எனினும் சிறிது நேரத்தின் பின்னர் அவ்விரு இளைஞர்களும் இறந்துவிட்டனர். பின்னர் அங்கு நின்ற ஏனைய இளைஞர்களைக் கூப்பிட்டு இறந்து கிடந்த இளைஞர்களின் சடலங்களைக் காட்டி அதேகதி தான் அவர்களுக்கும் என எச்சரித்தனர்.

### *இணுவிலில் சிறீலங்கா ஆயுதப்படையினரின் அட்டகாசம்*

ஜூலை 29 : 29-7-84 அன்று மாலை 4 மணியளவில் இணுவில் கந்தசாமி கோவிலுக்கு வந்த சிறீலங்கா ஆயுதப்படையினர் அங்கு நின்ற பொதுமக்களை கண்டபடி தாக்கினார்கள். பொதுமக்களைத்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாக்கிய ஆயுதப்படையினர் அவர்களது சைக்கிள்களை அருகிலிருந்த கிணற்றினுள் போடுமாறு உத்தர விட்டதையடுத்து பொதுமக்கள் சைக்கிள்களை கிணற்றினுள் போட்டனர். பின்னர் ஈழவிடுதலைப் போராளிகளை நினைவுகூரும் முகமாக அங்கு ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் அனைத்தும் ஆயுதப் படையினரின் பயமுறுத்தலின் பேரில் பொதுமக்களால் கிழித்தெறியப்பட்டன. சிறீலங்கா ஆயுதப்படை யினருக்கு ஈழவிடுதலைப் போராளிகளைப் பற்றிய தகவல்கள் கொடுத்த பாலகுமார் என்னும் கடற்படை அதிகாரி இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாகவே இத்தாக்குதலை சிறீலங்கா ஆயுதப் படையினர் நடத்தினர்.

### கோயிலினுள் புகுந்த கூலிப் படைகள்

ஆகஸ்ட் 10 : ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதியன்று தம்பலாகமம் கோணேஸ்வரர் ஆலய அர்ச்சகர் வழக்கமாக நடைபெறும் பூசை அலுவல்களைத் தொடங்கும் பொருட்டு கோவில் மணியை அடித்தபோது சிறீலங்கா கூலிப்படையினர் கோவிலிற்குள் உள்ளிட்டனர். கோவிலிற்குள் உள்ளிட்ட கூலிப்படையினர் கோவில் அர்ச்சகரை தலைமயிரில் பிடித்திழுத்து தாக்கியதுடன் பூசைகாண்பதற்காக வந்திருந்த பொது மக்களையும் தாக்கியபின்னர் முழங்காலில் நிற்குமாறு உத்தரவிட்டனர். கோவிலுக்கு வந்திருந்த சிலரது தலைமுடியையும் சிறீலங்கப்படையினர் கத்தரித்ததுடன் கொடிக்கம்பத்தைச்சுற்றியிருந்த துணியையும் கிழித் தெறிந்தனர். பின்னர் சுற்றாடலிலுள்ள இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்கென அழைத்துச் சென்றனர்.

### "சுன்னாகம் சம்பவத்தை விசாரிக்க சர்வதேச விசாரணைக்குழு

ஆக. 18 : சுன்னாகம் போலீஸ் நிலைய சம்பவம் குறித்து சர்வதேச விசாரணைக் குழுவொன்று விசாரணை நடத்தவேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கமிட்டித் தலைவர் திரு. வோல்ட்டர் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் உரையாற்றும்போது வேண்டுகோள் விடுத்துள்ளார். "சுன்னாகம் போலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் கொலை செய்யப்பட்டதாகவே கூறப்படுகிறது. ஆனால் என்ன நடந்தது என்பது குறித்து எமக்கு எதுவும் கிடைக்கவில்லை. எனவே நீதியான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும்" என்று திரு. வோல்ட்டர் அங்கு தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

### சுவிஸ் தூதுக்குழு திருப்பி அனுப்பப்பட்டது

ஆக. 19 : சிறீலங்கா அரசின் இனவிரோத நடவடிக்கைகளைப் பற்றி அறியவென சுவிஸ் தூதுக்குழுவொன்று அண்மையில் இலங்கை (சிறீலங்கா+ஈழம்) வந்தது. இலங்கை (சிறீலங்கா+ஈழம்) வந்த தூதுக்குழுவினர் ஈழத்தின் வடபகுதியில் அண்மையில் சிறீலங்கா கூலிப்படையினரின் தாக்குதலுக் குள்ளான பகுதிகளைப் பார்வையிடவும் முக்கியமான சிலரைச் சந்தித்து கருத்தறியவுமென யாழ்ப்பாணம் வந்திருந்தனர். ஆனால் சிறீலங்கா இனவெறி அரசு தடைவிதித்ததாலோ என்னவோ தூதுக்குழுவினர் தாக்குதலுக்குள்ளான எந்த இடங்களையும் பார்வையிடாமலும் எவரையும் சந்திக்காமலும் அவசரமாகத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

### வல்வெட்டித்துறையில் உண்ணாவிரதம்

ஆக 21: வல்வெட்டித்துறையில் வைத்து சிறீலங்கா அரசபடைகளினால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களையும் சிறுவர்களையும் விடுதலை செய்யக்கோரி 20-8-84 அன்று 500க்கும் அதிகமான தாய் மார்கள் வல்வெட்டித்துறை வேலிப்பிள்ளையார் கோவில் முன்றிலில் உண்ணாவிரதம் இருந்தனர். அதே நேரத்தில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களினதும் சிறுவர்களினதும் தந்தையரும் இளம் சகோதரர் களும் ஆலயத்தின் இன்னொருபுறத்தில் உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்த தாய்மார்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளித்தனர். "சிறீலங்கா இனவெறி அரசின் இனவெறி நடவடிக்கையினால் வீடு, வாசல்கள், அன்றாட ஜீவனம் செய்யும் படகுகள் ஆகிய வற்றை இழந்துள்ள நாம் இன்று எமது பிள்ளைகளையும் பறிகொடுத்துள்ளோம்" என்று கண்ணீர் சிந்திக் கூறினார்கள் அங்கிருந்த தாய்மார்கள்.

### ஜீவனோபாயத்தை கொண்டு நடத்துவதற்கு திண்டாடும் ஈழ மீனவர்கள்

ஆக 22: ஈழத்தில், குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் சிறீலங்கா இராணுவம் ஈழமக்களின் வீடுகளின்மீது குண்டுவீசியும் சொத்துக்களை சூறையாடியும், உயிர்களைப்பலியெடுத்தும் தனது வெறியாட் டத்தை நடத்தி வருகின்றது. இதன் விளைவாக இப்பகுதி மக்கள் தமது வீடுவாசல்களைவிட்டு வெளியேறி அயல் கிராமங்களிலுள்ள ஆலயங்கள், பள்ளிக்கூடங்களில் தங்கி தமது வாழ்க்கையை நடத்திவருகின்றனர். அத்துடன் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கடற்பகுதியில் எந்நேரமும் சிறீலங்கா, கடற்படையினரின் துப்பாக்கிவேட்டுச்சத்தம் கேட்டுக்கொண்டிருப்பதுடன் கடலுக்குச்செல்லும் மீனவர்களது மீன், இறால் போன்றவை சிறீலங்கா கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டும் மோசமானமுறையில் தாக்குதலுக்குள் ளாகியும் வருகின்றனர். இதனால் கடலுக்கு மீன்பிடிக்குச் செல்லுவதற்கு அஞ்சும் மீனவர்களது பொரு ளாதாரம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீனுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பஸ்மீது சிறீலங்கா கூலிப்படை துப்பாக்கிச்சூடு

ஆக. 22 : 22-8-84 அன்று இரவு 8-20 மணியளவில் குறிகட்டுவானில் இருந்து புறப்பட்ட யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்மீது மண்டைதீவுச்சந்தியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பஸ்சாரதியும் நடத்துனரும் படுகாயமடைந்தனர். பஸ் மண்டைதீவுச்சந்தியை வந்தடைந்ததும் திடீரென துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதாகவும் பஸ்ஸை நிறுத்தியதும் பஸ் ஓட்டிக்கொண்டிருந்த சாரதியின் நெஞ்சிலும் வலது கையிலும் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கியதாகவும் அதிக இரத்தம் பாய்ந்து கொண்டிருந்ததால் வேதனையுடன் கையைத் தூக்கிக்கொண்டு எழுந்து பார்த்தபோது நடத்துனர் பஸ்ஸுக்குள் கிடந்து முனகிக் கொண்டிருந்ததாகவும் சாரதி தெரிவித்துள்ளார். சிறீலங்கா இராணுவத்தின் இந்த அட்டூழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக 23-8-84 அன்று பூராவும் யாழ். மாவட்டத் தலைமையகமான கோண்டாவில் டிப்போ பஸ் ஊழியர்கள் கடமைக்குச் செல்லாதமையினால் பஸ்கள் எதுவும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

## ஆக்கிரமிப்புப்படைகளின் அத்துமீறலில் ஏற்பட்ட இழப்புகள்!

ஆக 22 : ஆகஸ்ட் 4ந் திகதி பொலிகண்டியில் சிறீலங்கா கடற்படையினர் இருவர் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைச் சந்திக்கு ட்ரக்கில் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் பருத்தித்துறை, உடுப்பிட்டி, தொண்டமானாறு ஆகிய பகுதிகளுக்கு மூன்று பிரிவுகளாகச் சென்று இராணுவ வெறியாட்டம் நடத்தினர். ஆகஸ்ட் 4ந் திகதிமுதல் 9ந் திகதிவரை நடந்த சிறீலங்கா இராணுவத்தின் வெறியாட்டத்தின் போது 130 வீடுகள், 90 கடைகள், 4கார்கள், 6 மீன்பிடி வள்ளங்கள் ஆகியன பாதிப்புக்குள்ளாகின அத்துடன் 13,05,000 ரூபா பெறுமதியான மீன்பிடிவலைகள் சிறீலங்கா கடற்படையினரால் எடுத்துச்செல்லப்பட்டன.

14ம் திகதி காலை 11 மணிக்கு மீண்டும் தாக்குதலை நடத்திய சிறீலங்கா இராணுவவெறியர்கள் மேலும் 41 வீடுகளையும் 10 கடைகளையும் கோவில்களையும் நாசமாக்கினர்.

## சிறீலங்கா இராணுவ ட்ரக்வண்டிமீது தாக்குதல்

ஆகஸ்ட் 24 : கரவெட்டியில் 24-8-84 அன்று சிறீலங்கா இராணுவ ட்ரக்வண்டிமீது ஈழ வாலிபர்கள் கோஷ்டி ஒன்று தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலின் போது சிறீலங்கா இராணுவத்தைச்சேர்ந்த ஒருவர் இறந்ததுடன் ஏழுபேர் காயமடைந்தனர். இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து சிறீலங்கா இராணுவத்தினர் தமது வழமையான வெறியாட்டத்தில் இறங்கியதன் விளைவாக அச்சுவேலிப் பகுதியில் பல வீடுகள், கடைகள் தபால் அலுவலகம் ஆகியன தீக்கிரையாக்கப்பட்டன. தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளுள் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி E. D. பாலசிங்கத்தின் வீடும் ஒன்றாகும். இந்த சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிடுவதற்காகச் சென்ற இந்தியன் எக்ஸ்பிரஸ் (சென்னை) ஆசிரியர் சையத் நக்வி உட்பட மூன்று வெளிநாட்டு பத்திரிகை ஆசிரியர்களை சிறீலங்கா இராணுவத்தினர் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக காவலில் வைத்து பின்னர் விடுதலை செய்தனர்.

## படுகொலை அரசின் மனித வேட்டைகளைக் கண்டித்து தாய்மார் நடத்திய நீண்ட ஊர்வலம்

ஆக. 24 : சிறீலங்கா நவ பாசிச அரசினால் சமீபத்தில் கைதான தமது பிள்ளைகளை விடுதலை செய்யக்கோரி ஆயிரக்கணக்கான தாய்மார் 24-8-84 அன்று யாழ்நகரில் நீண்ட ஊர்வலமொன்றை நடத்தினார்கள். யாழ் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன்னால் இருந்து ஆரம்பமான இவ் ஊர்வலத்தில் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை உட்பட யாழ் மாவட்டத்திலுள்ள பெண்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு ஊர்வலம் ஆரம்பமாகும் இடத்தை வந்தடைந்தனர். வேம்படி வீதியூடாகப் புறப்பட்ட அன்னையர் ஊர்வலம் 1ம் குறுக்குத் தெருவுக் கூடாகச் சென்று பிரதான வீதியை அடைந்தது. தகிக்கும் வெய்யிலில் அன்னையர்கள் இளம்பெண்களுடன் வயோதிபத் தாய்மாரும் ஊர்வலத்தில் காணப்பட்டனர். சோகமே உருவாக அடிமேல் அடிவைத்து அமைதியாக அன்னையர்கள் சென்று கொண்டிருந்த காட்சி அனைவரையும் கண்கலங்கச் செய்தது. ஊர்வலம் சென்று கொண்டிருந்த வீதிகளின் இருமருங்குகளிலும் சந்திகளிலும் வீட்டு வாசல்களிலும் ஏராளமானோர் குழுமி நின்று ஊர்வலத்தைப் பார்த்து உணர்ச்சி மேலீட்டினால் கண்ணீர் வடித்தனர். ஏராளமான சுலோக அட்டைகளை அன்னையர்கள் கைகளில் தாங்கி இருந்தனர். அவற்றில்,

நேற்று கண்ணீர்; இன்று அமைதிப் போராட்டம்; நாளை......
இன்று எமது குழந்தைகள்
  நாளை உங்கள் குழந்தைகள்,
ஊமைகளும், ஊனமுற்றவர்களும்
  உன்னை என்ன செய்தனர்,
விளையும் பயிரை முளையிலே கிள்ளாதே,

போன்ற வாசகங்கள் காணப்பட்டன. ஊர்வலம் யாழ் செயலகத்தை வந்தடைந்ததும் அன்னையர்கள் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு செயலகத்தையும் செயலக முன்றிலையும், சுற்றுப்புறங்களையும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூழ்ந்து முற்றுகையிடுவது போல் நின்று கொண்டார்கள். பின்னர் யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பித்து விட்டு அமைதியாக கலைந்து சென்றனர்.

தமிழ் இளைஞர்களை ஆயிரக்கணக்கில் பிடித்து வதைமுகாம்களில் வைத்து சித்திரவதை செய்வதன் மூலமும் ஈழமக்களை சுட்டுப் பொசுக்குவதன் மூலமும் ஈழமக்களைப் பயமுறுத்தி ஈழவிடுதலைப் போராட்டத்திலிருந்து அவர்களைப் பிரித்து விடலாமென தப்புக்கணக்குப் போட்ட சிறீலங்கா அரசுக்கு இவ் ஊர்வலம் ஓர் பலத்த அடியாகும்.

### களுவாஞ்சிக்குடி வங்கியில் கொள்ளை

ஆகஸ்ட் 25 : 25-8-84 சனிக்கிழமையன்று களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக்குள் நுழைந்த பதினைந்து இளைஞர்கள் அங்கிருந்த ஊழியர்களை அறையொன்றினுள் வைத்துப் பூட்டிவிட்டு 1.25 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்ததுடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் துப்பாக்கிகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

### "ஓராண்டுகாலமாக சிறீலங்கா ஆயுதப்படைகளுக்கு இஸ்ரேல் பயிற்சி"

—இந்திய பிரதமர்

ஆக. 26 : இந்திய நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர் படுகொலை செய்யப்படுவது குறித்து 3 மணி நேரம் விவாதம் நடந்தது. இந்த விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய இந்தியப் பிரதமர் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து இந்தியா அசட்டையாக இருக்க முடியாதென்று காட்டமாகப் பேசினார். மேலும் அவர் பேசுகையில், சிறீலங்கா பிரதமர் பிரேமதாசா அடிக்கடி இந்தியா மீது வீண்பழி சுமத்துவதை பற்றி குறிப்பிட்டு அவரது குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய் என்று மறுத்தார். ஈழத்தில் அப்பாவித்தமிழர்கள் சிங்கள இராணுவத்தினால் படுகொலை செய்யப்படுகிறார்கள். இஸ்ரேல் உளவுப் படையினர் உதவியோடு இந்த இனப் படுகொலை நடந்து வருகிறது என்று தெளிவாக குறிப்பிட்ட இந்தியப்பிரதமர் ஈழத்தமிழர்களின இன்னல்களைப் போக்க சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்றும் அறிவித்தார். இலங்கையில் அந்நிய நாடுகளைச் சேர்ந்த துருப்புக்கள் இருப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது என்பதை பிரதமர் இந்திரா தெளிவுப் படுத்தினார். இலங்கையில் (சிறீலங்கா+ஈழம்) இஸ்ரேல் உளவுப் படை நிலைகொண்டிருப்பது பற்றி எச்சரிக்கை செய்த இந்திய பிரதமர் சிறீலங்காவுடன் இஸ்ரேல் உறவு இராணுவ ரீதியில் இருக்கிறதென்பதை சுட்டிக்காட்டினார். ஏறக்குறைய சிறீலங்காவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே ராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு ஒரு வருடமாக இருக்கிறதென்பதை அழுத்தந்திருத்தமாக குறிப்பிட்டார். இது சம்பந்தமாக சிறீலங்கா அரசு சொல்லும் நொண்டிச் சமாதானத்தை இந்தியா ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை இந்திரா அறுதியிட்டுக் கூறினார்.

### சிறீலங்கா வதைமுகாமிலிருந்து தப்பிக்க ஈழ இளைஞர்கள் முயற்சி

ஆக 27 : ஈழத்தில் பலபாகங்களில் இருந்தும் சிறீலங்கா இராணுவத்தினால் ஆயிரக்கணக்காக கைது செய்யப்பட்ட ஈழ இளைஞர்கள் சிறீலங்காவிலுள்ள வதைமுகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தங்காலையிலுள்ள வதைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈழ இளைஞர்களில் சிலர் சித்திரவதைக் கொடுமை தாங்கமுடியாது வதைமுகாமிலிருந்து தப்பிக்க முயற்சிசெய்தனர். வதைமுகாமின் கம்பிகளை உடைத்துக்கொண்டு வெளியேறிய இளைஞர்கள் எதிர்பட்ட இரண்டு சிறீலங்கா வதைமுகாம் காவலர்களைக்கட்டிப்போட்டனர். அங்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட போர்வையை ஜன்னல் கம்பியில் தொங்க விட்டு அதன் உதவியால் தப்பிக்க திட்டமிட்டனர், அவ்வாறு அவர்கள் தப்பிப்பதற்கு முன்பாக கட்டிப் போடப்பட்டிருந்த ஒரு காவலாளி கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு அபாய ஒலியை எழுப்பினான். அதைக்கேட்டதும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த இதர காவலாளிகளும் கப்பற்படையினரும் விரைந்து சென்று இளைஞர்களைப்பிடித்தனர். பிடிபட்ட இளைஞர்கள் மேலும் படுமோசமான முறையில் சித்திர வதை செய்யப்பட்டதாக எமக்குத் தெரிய வருகிறது.

### "ஈழத்தை அங்கீகரியுங்கள்"

ஆக. 28 : ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது பற்றி இந்திய பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின்போது தி. மு. க. உறுப்பினர் சி. டி. தண்டபாணி பின்வருமாறு கூறினார். ஈழத்தமிழர் பிரச்சினை ஓர் சர்வதேசப் பிரச்சினை. கூட்டுச்சேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பினை ஏற்றிருக்கும் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அந்தப் பதவியை பயன்படுத்தி ஈழத்தமிழர் பிரச்சினையை மற்ற கூட்டுச்சேரா நாடுகளுடன் விவாதித்து முடிவுகாண முயற்சிக்க வேண்டும். இந்திய அரசு இலங்கையுடன் தூதர் உறவை முறித்துக் கொள்ள வேண்டும். ஈழத்தை அங்கீகரிக்க வேண்டும்.

### போலீஸ் ஜீப் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது

ஆக. 28 : 28-8-84 அன்று யாழ். போலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் சிறீலங்கா போலீஸ் காரர்கள் இருவர் சின்னக்கடைக்கு சென்றிருந்த சமயம் இனந்தெரியாத இரு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் ஜீப் வண்டியின் சாவியை அபகரித்துக்கொண்டு ஜீப் வண்டியை எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்றுவிட்டனர். ஜீப்வண்டி செல்லும்போது மேலும் இருவர் ஏறிக்கொண்டனர். ஜீப் வண்டியை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கல்லுண்டாய்க்கு எடுத்துச் சென்ற இளைஞர்கள் குண்டுவைத்து தகர்த்தனர். போலீஸாரால் பாவிக்கப்பட்டு வந்த இந்த ஜீப் வண்டி யாழ். நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமானதாகும்.

*சிறீலங்காவில் படுகொலை ஆயுதங்கள் குவிகின்றன! சிறீலங்கா அரசின் இராணுவச் செலவிற்கு 4.6 கோடி டொலர்கள்*

ஆகஸ்ட் 28 : ஆயுதப்படைகளை நம்பி ஆட்சிசெலுத்திவரும் சிறீலங்கா இனவெறி அரசு இவ் வருடத்திற்கான இராணுவச் செலவிற்கென ஒதுக்கியிருந்த 2. 6 கோடி டொலர்கள் போதாதென்று மேலும் இரண்டு கோடி டொலர்களை ஒதுக்கியுள்ளது. அத்துடன் உலகத்திலுள்ள விடுதலை இயக்கங்களை ஒடுக்க ஆயுதங்கள் விநியோகிக்கும் நாடுகளில் ஏழாவது நாடாகத் திகழும் சியோனிச இஸ்ரேலிடமிருந்து கீழ்க் காணும் ஆயுதங்களை கொள்வனவு செய்யவிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

1. டபேர் கிளாஸ் பற்றோல் கிறாப்ற் 22 எம். எம். துவக்குடன் கூடியது (Dabur class patrol craft equipped with 22mm guns)
2. ஐ. ஏ. ஐ. வெஸ்ற்வின்ட் சிஸ்கான் றெக்கெனைசன்ஸ் ஆகாயவிமானம் (IAI westwind Seascan recannaissance aircraft)
3. 50 கலிபர் மெஷின் கன் ( .50 Calibre machine gun)
4. அன்ரி பர்ஸனல் மைன்ஸ் (Anti personnel mines)
5. கலில் 5. 56 எம். எம். அசோல்ட் றைபிள்ஸ் (Galil 5. 56 mm assault rifles)
6. உசி சப்-மெஷின் கன் (Uzi sub machine gun)
7. கைக்குண்டுகள் (Hand granades)
8. தோட்டாக்கள், ரவைகள் (Ammunitions)
9. எலக்ரோனிக் செவெயிலன்ஸ் சிஸ்ரம் (Electronic Surveilance System)
10. அடிப்படை கவுன்டர் இன்சேஜன்சி ஆயுதம் ஹெலிகொப்டர் உட்பட (Basic counter insurgency weapon with helicopter)
11. லைட் ஸ்ரைக் விமானம் (Light strike aircraft)
12. ஆர்மட் பர்சனல் கரியர் (Armoured personnel carrier)

மேலும் கடல்வலையைப் பாதுகாப்பிற்குப் பாவிக்கும் பொருட்டு டெலிசிகா (Delicica), மொன்றோலியா (Monrolia) என்னும் இரு சிங்கப்பூர் கப்பல்களையும் சிறீலங்கா இனவெறி அரசு கொள்வனவு செய்துள்ளது.

*ஈழமாணவர்களின் முழுஅளவிலான பாடசாலை பகிஷ்கரிப்பு*

ஆக. 31 : ஈழமாணவர்கள் சிறீலங்கா ஆயுதப்படையினரால் தாக்கப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்தும், தங்களின் உயிருக்குப் பாதுகாப்புக்கோரியும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளின் ஈழமாணவர்களும், மாணவிகளும் 31-8-84 அன்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் சுமார் ஐநூறு பாடசாலைகளைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து இருபதினாயிரம் ஈழமாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. கிளிநொச்சி மாவட்டத்திலும் சுமார் அறுபது பாடசாலைகளைச் சேர்ந்த ஈழமாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர். இதனால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளும் வெறிச்சோடிக் கிடந்தன. "ஈழமாணவர்களின் கல்விக்கும் உயிருக்கும் உத்தரவாதம் செய்; கைது செய்யப்பட்ட அப்பாவி ஈழமாணவர்களை விடுதலை செய்" என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பை ஈழமாணவர்கள் நடத்தியிருந்தனர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரன் கடந்த ஜூலை 20-ம் திகதி கைது செய்யப்பட்டு விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதையும், யாழ் இந்துக்கல்லூரி மாணவன் சந்திரசேகரம் தனபாலன் கடந்த 28-ம் திகதி சிறீலங்கா ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்னர் அவரது அடையாள அட்டை கிழிக்கப்பட்டு பலத்தகாயங்களுடன் அவரறியாத இடத்தில் விடுவிக்கப்பட்டதையும் கண்டித்து துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தனர்.

*கலாச்சாரப் படுகொலைகள் தொடர்கின்றன*

*"ஹாட்லிக் கல்லூரி நூலகம் தீக்கிரை"*

செப். 1 : 1-9-84 அன்று இரவு 'ட்ரக்'கிலும் இரண்டு ஜீப் வண்டிகளிலும் சிறீலங்கா போலீஸ் அதிரடிப்படையினர் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறையை நோக்கி சென்று கொண்டிருந்தபோது திக்கம் என்ற இடத்திலுள்ள சுடலைக் கருகாமையிலுள்ள வீதியில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததினால் 'ட்ரக்' தூக்கி வீசப்பட்டது. இதனால் ஆறு சிறீலங்கா அதிரடிப்படையினர் பலியானதுடன் மற்றும் பத்துப்பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து வெறியாட்டத்தில் இறங்கிய சிறீலங்கா

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூலிப்படையினர் ஹாட்லிக் கல்லூரியின் மூன்று பிரதான கட்டிடங்கள், இரசாயன ஆய்வுக்கூடம், நூல்நிலையம் ஆகியவற்றை தீக்கிரையாக்கியதுடன் பொதுமக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய பலர் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். ஹாட்லிக் கல்லூரி நூலகத்தில் சுமார் பத்துலட்சம் ரூபா பெறுமதியான கிடைத்தற்கரிய 7,500 நூல்கள் தீக்கிரையாகி விட்டதாக உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியிலுள்ள பல வீடுகள் சிறீலங்கா கூலிப்படையினரால் தீக்கிரையாக்கப்பட்டதைத தொடர்ந்து அப்பகுதி மக்கள் பாதுகாப்புத்தேடி வேறு கிராமங்களுக்கு சென்றுள்ளனர். பருத்தித்துறையில் சிறீலங்கா ஆயுதப்படையினர் கடைகளுக்குத் தீ வைத்ததனால் 41 கடைகள் தீக்கிரையாகின, சில கடைகள் தீயிடப் பட்டபோது உடனடியாக பொதுமக்களால் அணைக்கப்பட்டன.

பருத்தித்துறையில் மேலும் இரண்டு அச்சகங்களும் ஒரு கைத்தொழில் நிறுவனமும் ஒரு வானும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை நேர அறிவிப்பாளர் காரியாலயமும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

### மக்கள் விரோதிகள் இருவருக்கு மரண தண்டனை

செப். 2: காரை நகரைச் சேர்ந்த அருளானந்தம் சக்திவேல், சின்னத்தம்பி கனகலிங்கம் ஆகியோருக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தினால் மரணதண்டனை வழங்கப்பட்டது. இம் மரணங்களுக்கு உரிமைகோரி தமிழீழ விடுதலை இயக்கம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில், ''முட்களைக் களைந்து விடுதலையை முன்னெடுப்போம்'' என்ற தலைப்பில், ''இயக்கம் செயற்பட்டுவரும் இந்த காலகட்டத்தில், இயக்கத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கும் வகையிலும் செயற்பட்ட காரை நகரிலுள்ள வேதரடைப்பைச் சேர்ந்த அருளானந்தம் சக்திவேல் (சிவா), ஆலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகலிங்கம் (லிங்கன்) ஆகிய இருவருக்கும் முழுமையான விசாரணையின் பின்னர், 1—ம், 2—ம் திகதிகளில் (செப்.) மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது'' என்று குறிக்கப்பட்டுள்ளது. ''வலந்தலை இந்துமதி கொலை, ஆலடி செல்லப்பா ஸ்டோர்ஸ் கொள்ளை, வேரிப்பட்டி தவறணைக் கொள்ளை, காரை நகர் ப.நோ.கூ.ச. கொள்ளை முயற்சி, புதுறோட் கந்தசாமி வீட்டில் கொள்ளை முயற்சி, அத்துடன் மேற்படி கொலை, கொள்ளைகளில் திட்டமிட்டு ஈடுபட்ட இவர்கள் இயக்கத்துக்காகவே இவை செய்யப்படுகின்றன என்று வேறுசில நபர்களையும் நம்பச் செய்து அவர்களையும் இச் சம்பவங்களில் ஈடுபடுத்தினர்'' என்றும் மேற்படி பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வவுனியாவிற்கு அண்மையில் ஈழமக்கள் சுட்டுக்கொலை

செப்டம்பர் 10: நாயாறு—சொக்கிளாய் வீதியில் ஈழ இளைஞர்கள் குழுவொன்று வைத்த கண்ணி வெடி வெடித்ததனால் 10-9-84 அன்று சிறீலங்கா இராணுவத்தைச்சேர்ந்த 16 பேர் இறந்தனர். இதனையடுத்து இரத்த வெறிபிடித்த சிறீலங்கா இராணுவத்தினர் அப்பாவி ஈழமக்கள் ஆறு பேரைச் சுட்டுக்கொலை செய்தனர். இதனுடன் இரத்தவெறி அடங்காத சிறீலங்கா கூலிப்படையினர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த VIP என்னும் தனியார் பஸ் ஒன்றை றம்பேவா என்னும் இடத்தில் வைத்து 46 பிரயாணிகளுடன் வவுனியாவிற்கு அண்மையிலுள்ள ஓர் காட்டுப் பகுதிக்கு துப்பாக்கிமுனையில் கடத்திச் சென்றனர். பஸ் காட்டுக்குள் சென்றதும் பஸ்ஸிற்குள் இருந்த ஈழ மக்களது பணம், நகை, ஆகியவற்றை கொள்ளையடித்துக் கொண்டு அனைவரையும் கீழே இறக்கினார்கள். சிங்கள பயணிகள் நான்கு பேரை விட்டுவிட்டு தமிழ்ப்பயணிகளை ஓடும்படி கூறிவிட்டு, அவர்கள் பயந்து ஓடும்போது பின்னால் இருந்து துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப் பட்ட 15 தமிழ்ப்பிரயாணிகள் அதே இடத்தில் பிணமாகி வீழ்ந்தனர், காயமடைந்த ஆறு பேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பின் மொத்தமாக இறந்தவர்களின் தொகை 26 என தெரியவந் துள்ளது. அத்துடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த ஐந்து தமிழ்ப்பெண்களையும் கதறக்கதற காட்டிற்குள் இழுத்துச்சென்று கற்பழித்தனர். இவர்களுள் மூன்று பேரின் கதி என்னவென்று இன்னும் தெரியவில்லை.

### ''ஈழமக்களுக்கு இந்தியமக்களின் பேராதரவு உண்டு''

**இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி'**

செப்டம்பர் 16: ஈழமக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, மனிதாபிமான உணர்வுடன் உலக நாடுகள் அணுகவேண்டும் என்று இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி வேண்டுகோள் விடுத்தார். தஞ்சை ராஜராஜசோழன் முடிசூட்டுவிழாவில் பேசும்போதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் பேசுகை யில் ஈழமக்களுக்கு இந்திய மக்களின் பரிவும் ஆதரவும் என்றென்றும் உண்டு. பல்வேறு இயல்களில் வல்லுனர் களான தமிழ் மக்கள் உலகெங்கும் பரவியுள்ளனர். அவர்களின் உழைப்பும் திறமையும் மலேஷியா, மொரீஷியஸ், சிங்கப்பூர், இலங்கை, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் உயர்வுக்கு உறுதுணையாக இருந்தன. அவர்கள் எங்கு சென்றாலும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நல்லுணர்வுடன் வாழ்கின்ற னர். ஆயினும் தங்கள் உற்றார், உறவினரையும் பிழைப்பையும் இழந்து பரிதவிக்கும் ஈழமக்கள் துன்பம் கண்டு நாம் இன்று வருந்துகின்றோம். அவர்கள் துன்பத்தில் நமக்கும் பங்குண்டு. ஈழமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதுபற்றி இந்திய மக்கள் இதயபூர்வமாக உணர்ந்திருக்கிறார்கள். ஈழ மக்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணமாக இருந்தாலும் சரி, குடியேற்றத்தை ஏற்படுத்தி சிறுபான்மையாக்கப்பட்டிருக்கும் கிழக்குப்பகுதியாக இருந்தாலும் சரி அவர்களுக்கு ஆபத்தோ இடையூறோ ஏற்படாதவகையில் நாம் இங்கே செயல்பட வேண்டும். ஈழத்தில் நடைபெறும் மனிதப் படுகொலையை யாரும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. இதை ஈழமக்கள் பிரச்சினை என்றோ இந்திய பிரச்சினை என்றோ பார்க்காமல் மனிதாபிமான உணர்வுடன் அணுகி உலக நாடுகள் இது குறித்து கவலைப்பட வேண்டும் என்று உணர்ச்சி மிகுந்த குரலில் கூறினார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


### அமெரிக்காவின் இராணுவக் கூட்டாளிகளின் ஆயுத விநியோகம்

ஏகாதிபத்திய அமெரிக்காவின் தலைமையிலுள்ள "நேட்டோ" கூட்டமைப்பில் உள்ள பிரிட்டிஷ் சிறீலங்கா அரசுக்கு இரண்டு யுத்தக்கப்பல்களில் ஆயுதங்களை செப்டம்பர் மாத நடுப்பகுதியில் அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் நவீன ஆயுதங்களை சிறீலங்காவிற்கு வழங்கியுள்ளன. சீனா பலவிதமான பீரங்கிப்படகுகளை சிறீலங்கா அரசுக்கு வழங்கியிருந்ததும், இந்த பீரங்கிப் படகுகள் மூலம் ஈழக் கடற்கரையோரங்களில் தாக்குதல்கள் நடத்தப்படுவதும் அனைவரும் அறிந்ததே.

இப்போது பிரிட்டிஷ் கொலைகார ஆளும் வட்டாரங்கள் சிறீலங்காவுக்கு அனுப்பியுள்ள ஆயுதங்களும் ஈழமக்களை அழித்தொழிக்கவே வழங்கப்படுகின்றன. அமெரிக்காவும் அதன் இராணுவ மேலாதிக்க கூட்டாளிகளும் சிறீலங்காவுக்கு உதவுவதன் மூலம் இந்துமாகடல் பிராந்தியத்தில் தமது மேலாதிக்க நோக்கங்களை நிறைவேற்ற திட்டமிடுகின்றன.

### போராளிகளின் படகுமீது தாக்குதல்!

செப்டம்பர் 23: ஈழக்கடற்பிராந்தியத்தில் சென்றுகொண்டிருந்த போராளிகளின் படகுமீது சிறீலங்கா கடற்படை தாக்குதல் நடத்தியது. ஆனால் போராளிகள் எவரும் காயம் அடையவில்லை. கடல் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவத் தொழிலாளர்களையும் சிறீலங்கா கடற்படை தாக்கியது. இதனால் பல ஈழ மீனவர்கள் (மாதகலைச் சேர்ந்தவர்கள்) பலத்த காயமடைந்தனர்.

### தேசத்துரோகிகள், சமூகவிரோதிகளுக்கு மரணதண்டனை

செம்டம்பர் 23: கிளிநொச்சியில் 4 சமூகவிரோதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இதே தினம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப்பிரிவான மக்கள் விடுதலைப்படை (P L A) குமாரசாமி ஜெய சேனன் என்னும் தேசத்துரோகி ஒருவனுக்கு மரணதண்டனை நிறைவேற்றியது.

இவன் கடந்த ஐந்து வருடமாக சிறீலங்கா அரசின் கைக்கூலியாக செயல்பட்டு வந்த ஒற்றனாகும். இராணுவ அதிகாரி இரணதுங்காவின் நெருங்கிய ஒற்றனான இவன் ஆணையிறவு இராணுவமுகாமில் ஈழப் போராளிகளை அடையாளம் காட்டும் வேலையிலும் ஈடுபட்டுவந்தான். போராளிகள் பற்றிய உளவு வேலையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இவனை மக்கள் விடுதலைப் படை கைது செய்தது. விசாரணையின் பின்பே அவனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

இதே தினம் திருமலையிலும் தேசத்துரோகிகள் நால்வருக்கு மரணதண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது.

### பாலஸ்தீன தூதர் எச்சரிக்கை

செப்டம்பர் 23: இஸ்ரேலுடன் சிறீலங்கா அரசு உறவு வைத்திருப்பதற்கு அரபு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் சிறீலங்காவிற்கு கொடுக்கும் உதவிகளை நிறுத்தி விடவும் திட்டமிட்டுள்ளதாக இந்தியாவில் உள்ள பாலஸ்தீன நாட்டு தூதர் காலெட் எல். சேக் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது:— ஈழவிடுதலைப் போராளிகளை ஒழிக்க இஸ்ரேல் நாட்டின் மொசாட் அதிரடிப்படையை சிறீலங்காவிற்கு அழைத்ததாக சிறீலங்கா அதிபர் ஜெயவர்த்தனா அறிவித்திருக்கிறார். மொசாட் படைக்கு அது முடியாத காரியம். தெற்கு லெபனான், கனடா ஆகிய நாடுகளில் மோதல் ஏற்பட்டபோது இஸ்ரேல் மொசாட் படையால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இஸ்ரேலுடன் உறவு வைத்துக்கொள்ள வேண்டாம் என்று அரபு நாடுகள் சார்பில் சிறீலங்கா ஜனாதிபதிக்கு பல தடவை எடுத்துச்சொல்லப்பட்டது. இதை இலங்கை (சிறீலங்கா + ஈழம்) சென்று சிறீலங்கா வெளிநாட்டு மந்திரியிடம் நான் கூறினேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் ஜெயவர்த்தனா ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் சிறீலங்காவுடனான உறவை ஈரான் நாடு துண்டித்துக்கொண்டது.

சிறீலங்காவில் புதிதாக கட்டப்பட்டு வரும் மகாவலி திட்டத்திற்கு சவுதி அரேபியாவும் குவைத்தும் பண உதவி செய்தன. இப்பொழுது அந்த உதவியை இரண்டு நாடுகளும் நிறுத்திவிட்டன. அரபு நாடுகளில் வேலை பார்க்கும் 3 லட்சம் இலங்கையர்களை தொடர்ந்து அரபு நாடுகள் வேலைக்கு வைத்துக் கொள்ளுமா என்பது சந்தேகம்.

அரபு நாடுகளின் உயர்மட்டக் குழுக்கூட்டம் அடுத்த மாதம் சவுதி அரேபியாவில் நடக்கிறது. இந்த கூட்டத்தில் சிறீலங்காவிற்கு அரபு நாடுகள் செய்துவரும் உதவிகளை நிறுத்துவது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படும். அதன் பிறகு சிறீலங்காவை முற்றிலும் அரபு நாடுகள் புறக்கணிக்கும்.

சிறீலங்காவில் இஸ்ரேல் படை இருப்பது இந்தியாவுக்கும், குறிப்பாக தமிழகத்துக்கும் ஆபத்து. இந்தியாவை சுற்றியுள்ள குட்டி நாடுகளுக்கும் ஆபத்து. இவ்வாறு பாலஸ்தீன நாட்டு தூதர் காலெட் எல். சேக் கூறினார்.

### "விடுதலை இயக்கங்களிடையே" வீதிச் சண்டை

செப்டம்பர் 25: யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கொள்ளை முயற்சி நடந்தது. இதில் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் குழுவொன்றை வேறு ஒரு இளைஞர் இயக்கத்தினர் துரத்திச் சென்றனர். கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் குழு தமது இருப்பிடத்திற்குள் சென்றுவிட திரும்பிச் சென்ற மற்றைய இளைஞர் இயக்கத்தினர் அன்று இரவே அவ்விடத்தைச் சுற்றிவளைத்தனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குண்டுகள் வீசித் தாக்குதலும் நடத்தினர். உடனே பதிலுக்கு இளைஞர் குழுவும் திருப்பித்தாக்கியது. குண்டுகளை வீசியது. இந்த வீதிச்சண்டையில் இரு பகுதிக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டன.

கூட்டுறவுச் சங்க கொள்ளை முயற்சிக்கு "நாமே பொறுப்பு" என "தமிழ் ஈழ புரட்சி இராணுவம்" என்னும் அமைப்பொன்று உரிமை கோரியுள்ளது.

### "சிறீலங்கா இஸ்ரேல் உறவு உறுதியானது"

அக்டோபர் 2: சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் ஜூன் மாதம் பகிரங்கமாக ஆரம்பிக்கப்பட்ட உதவி நிலையம் மூடப்படமாட்டாது. கடந்த மாதம் கொழும்பிலிருந்து புறப்பட்ட தூதருக்கு பதிலாக அடுத்தவாரமே அஜ்ரீல் கானி தூதராக நியமிக்கப்படுவார். இவ்வாறு சியோனிச இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளான். இஸ்ரேல் உறவை மூடிமறைக்க சிறீலங்கா பாசிச அரசு என்னதான் முயன்றாலும் உண்மைகள் தெளிவாகவே உள்ளன. சியோனிச இஸ்ரேலும், பேரினவாத சிறீலங்கா ஆளும் வர்க்கமும் கூடிக்குலாவுவதை அமெரிக்கா பலமாக ஆதரிக்கிறது. அமெரிக்காவின் ஏவல் நாய்கள் கூடல் நடத்துவதும், இவற்றின் நலன்கள் ஒன்றாகவே இருப்பதும் அதிசயமல்லவே.

### ஈழத்தில் படுகொலை ஆயுதங்கள் குவிக்கப்படுகின்றன
### அழித்தொழிப்பு யுத்தத்துக்கான தயாரிப்பில் பாசிஸ்டுக்கள் தீவீரம்

சிறீலங்காவிலிருந்து கடந்த செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முதல், நடு இரவில் விமானங்கள் மூலம் ஈழத்திலுள்ள பலாலி சிறீலங்கா விமானப்படைதளத்துக்கு ஆயுதங்கள் அனுப்பப்பட்டன. பெருமளவான ஆயுதங்கள் இவ்வாறு குவிக்கப்பட்டுள்ளதாக செய்தி கிடைத்துள்ளது. இது தவிர யாழ்ப்பாணத்திலுள்ள கோட்டையில் இஸ்ரேலிய அதிரடிப்படையினர் ஈழத்தில் நிலைகொண்டிருக்கும் சிறீலங்கா கொலைகாரப் பட்டாளங்களுக்கு தீவிர பயிற்சியளிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இப்பயிற்சி கொடுப்பதற்கென இஸ்ரேலிய "மொசாட்" கொலைகாரப் படையைச் சேர்ந்தவர்களும் நடு இரவில் விமானத்தில் பலாலி விமான நிலையத்தில் இறக்கப்படுகின்றனர். ஈழமக்களை ஒழித்துக்கட்ட சிறீலங்கா பாசிஸ்டுகள் படுகொலைத் தயாரிப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

### "ஈழத்தில் இரத்த ஆறு ஓடுகிறது"

**—சிறீலங்கா கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர்.**

யாழ்ப்பாணத்தில் காரணமின்றி இரத்த ஆறு ஓடுகிறது. பிரச்சனைகளுக்கு இராணுவத் தீர்வுகாண முற்பட்டால் முழுச்சமுதாயமும் அழிந்துவிடும். வடக்கில் கைதாகும் தமிழ் வாலிபர்கள் பற்றிய விவரங்

---

**அன்பார்ந்த தோழர்களே வாசகர்களே! ஆகஸ்ட் மாதத்தில் இருந்து ஈழம், இந்தியா தவிர்ந்த பிற பகுதிகளின் ஈழச் செய்தி வினியோகம் லண்டன் கிளையிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஈழச் செய்தியினைப் பெறுபவர்களும், பெறவிரும்புகின்றவர்களும் கீழ் உள்ள படிவத்தை நிரப்பி இலண்டன் கிளைக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

Please send me..................................copies of "EELAM NEWS" Per Issue.

I enclose a Donation for...........................................................made payable to "EELAM PEOPLES INFORMATION CENTRE"

**(Block Capitals Please)**

***Name***..........................................................................................................

***Address***.......................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

***Country***.......................................................................................................

***Tel. No***.........................................................................................................

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை அறிய முடியவில்லை. இவ்வாறு சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான சரத் முத்வேத்துகம கூறியுள்ளார். வடக்கில் இன்று அரசு நடத்தும் சம்பவங்கள் அரபுமண்ணில் இஸ்ரேலியர் நடத்தும் கொடுமைகளுக்கு சமமானவை என்றும் "சரத்" கூறியுள்ளார்.

## கைது செய்யப்பட்ட வாலிபர்கள் நடுக்கடலில் வைத்து படுகொலையாகினர்

சிறீலங்கா கடற்படைக்கும், ஈழப்போராளிகளுக்கும் நடந்த மோதலில் 25 போராளிகள் கொல்லப் பட்டதாகச் சிறீலங்கா அரசின் தகவல் தொடர்புச்சாதனங்கள் பிரச்சாரம் செய்தன. போராளிகளைக் கொலை செய்துவிட்டதாகக் கூறி ஈழமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவது. ஆயுதப்படைகளிடையே உற்சாகத்தை வலுப்படுத்துவது ஈழப் போராளிகளை அதிர்ச்சியடையச் செய்வது என்பதே சிறீலங்கா அரசினதும் அதன் கொலைகாரக் கூட்டாளிகளினதும் நோக்கமாகும்.

ஈழமெங்கும் கைதான ஈழவாலிபர்களை நடுக்கடலுக்குப் படகுகளில் ஏற்றிவந்து சிறீலங்கா கடற் படை தனது துப்பாக்கிக் குண்டுக்குத் தீனியாக்கியுள்ளது. இப்படுகொலை நடவடிக்கையை முடித்ததும் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி வாலிபர்களைப் "பயங்கரவாதிகள்" எனப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எம். பி. எம். கல்யாணசுந்தரம் இப்படுகொலையைக் கண்டித்துள்ளார். கச்சத்தீவில் சிறீலங்கா அரசு தனது பட்டாளங்களுக்கு இரகசியமாக பயிற்சி கொடுப்பதையும் தோழர் எம். கல்யாணசுந்தரம் கண்டித்துள்ளார்.

## சோவியத் மக்களுக்குப் புரட்சிகர வாழ்த்துக்கள்!

அக்டோபர் 25-ம் நாள் 1917-ம் ஆண்டு சோவியத் புரட்சியின் வெற்றி நாள். உலகப் பாட்டாளி வர்க்கச் சக்திகளும், தேச விடுதலை இயக்கங்களும் புத்துணர்வு பெற்ற அந்த மாபெரும் நாளை நினைவு கூருவோம்.

சோசலிச நாடுகளையும், அவற்றினால் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்திய எதிர்ப்புச்சக்திகளையும் அச்சுறுத்தும் சர்வதேசக் கொலைகாரக்கும்பலான அமெரிக்காவையும், அதன் இராணுவ வெறிக்குத் துணை போகும் சக்திகளையும் தோற்கடிக்க உறுதி பூணுவோம்.

***மாபெரும் புரட்சியின் நினைவைக் கொண்டாடும் சோவியத் குடியரசின் மக்களுக்கு ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) தனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது.***

---

கீழ்க்காணும் வெளியீடுகளைப் பெறவிரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்க!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தத்துவ, இலக்கிய ஏடு
— ***ஈழமுழக்கம்*** (மாதம் ஒரு முறை)

புரட்சிகர கவிதைகள், முற்போக்கு ஆக்கங்களைச் சுமந்து வருகிறது

---

***"முதலாவது காங்கிரஸ் தலைமை உரை"***

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதலாவது காங்கிரசில் செயலாளர் நாயகம் **க. பத்மநாபா** அவர்கள் ஆற்றிய தலைமை உரை. EPRLF இன் கடந்தகால, எதிர்காலச் செயற்பாடுகள் பற்றி அறிய விரும்பும் அனைவரும் படித்தறிய வேண்டியது.

---

# வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

---

PRINTED MATTER

**EPIC**

HEAD OFFICE :

POST BAG. 5551
MADRAS - 600 094, S. INDIA

LONDON BRANCH :

B. M. BOX 1738
LONDON WCI N 3XX, U. K.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்